# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.08/2025 நாள் : 05.02.2025**

**சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில், மணலி மண்டலம், மணலி குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ், மணலி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் குடிநீர் பிரதான குழாயினை காமராஜர் சாலை சந்திப்பில் அமைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாயுடன் இணைக்கும் பணிகள் 06.02.2025 அன்று மாலை 6 மணி முதல் 07.02.2025 அன்று காலை 6 மணி வரை (12 மணி நேரம்) மேற்கொள்ளப்பட உள்ளதால் மணலி மண்டலத்திற்குட்பட்ட இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், மணலி பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில், மணலி மண்டலம், மணலி குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ், மணலி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் குடிநீர் பிரதான குழாயினை காமராஜர் சாலை சந்திப்பில் அமைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாயுடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் **06.02.2025 அன்று மாலை 6 மணி முதல் 07.02.2025 அன்று காலை 6 மணி வரை (12 மணி நேரம்)** துவாரகா நகர் குடிநீர் பகிர்மான நிலையம் மற்றும் மணலி புதுநகர் குடிநீர் பகிர்மான நிலையங்களின் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படும். ஆகையால் மணலி மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| மண்டலம் | பகுதிகள் |
|---|---|
| மண்டலம்–2 (மணலி) | இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், மணலி |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044–4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in